**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 89** **நாள்: 20.06.2016**

# சென்னைப் பள்ளிகளில் தேர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி தீவிர நடவடிக்கை !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் துணை ஆணையர் (கல்வி) அவர்களின் தலைமையில் கல்வி அலுவலர், கூடுதல் கல்வி அலுவலர் மற்றும் 10 உதவி கல்வி அலுவலர் பணிபுரிந்து வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 32 மேல்நிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப்பள்ளிகள், 92 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 119 தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 165 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மொத்தம் 87,567 மாணவ/மாணவியர்கள் பயின்று வருகின்றனர். மேலும் சென்னை பள்ளிகளில் 261 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களும், 1062 பட்டதாரி ஆசிரியர்களும், 128 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 73 சிறப்பாசிரியர்களும் பணியாற்றுகின்றனர்.

சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, தரமான கல்வியை பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் வழங்குவதற்காக சென்னைப் பள்ளிகளில் கீழ்கண்டவாறு பல்வேறு வகையான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பான நலத்திட்டங்களினால் பள்ளிகளின் தேர்ச்சி விழுக்காடு இந்த ஆண்டு 10ம் வகுப்பில் 92%ல் இருந்து 95% ஆகவும் 12ம் வகுப்பில் 85%ல் இருந்து 86% ஆகவும் உயர்ந்துள்ளது.

தற்சமயம் 165 மழலையர் பள்ளிகள் உள்ளது. மழலையர் வகுப்புகளில் பயிலும் அனைத்து மழலையர்களுக்கும் விலையில்லா புத்தகங்கள் வண்ணச் சீருடைகள் மற்றும் காலணிகளும் ரூ.50,00,000/- செலவில் வழங்கப்பட்டு வருகின்றது. வீட்டில் போதுமான கற்றல் சூழ்நிலை இல்லாத மாணவர்களின் பயன்பாட்டிற்காக அதிநவீன முறையில் இரண்டு உண்டு உறைவிடப்பள்ளிகள் அமைக்கப்பட்டு ரூ.79,000/- செலவில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. +2 தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மருத்துவம், பொறியியல், கலை, சட்டப்படிப்பு மற்றும்

உயர்கல்விகள் பயில கல்வி உதவித்தொகை ரூ.1,32,91,000/– படிப்பு காலம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

Centre for Science of Learning (CSL) நிறுவனத்துடன் இணைந்து ரூ.2,00,00,000/– செலவில் மாணவர்களின் அறிவியல் திறனை மேம்படுத்த அறிவியல் ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.2,25,00,000/– செலவில் கணினி ஆசிரியர்கள் மற்றும் கணினி உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். Teach For India (TFI) என்ற நிறுவனத்துடன் இணைத்து ரூ.1,00,00,000/– செலவில் மாணவர்களுக்கு ஆங்கில வழிக்கல்வி மிகச்சிறப்புடன் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் சுமார் ரூ.15,00,000/– செலவில் விலையில்லா தேர்வு விடைத்தாள் மற்றும் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா செய்முறை பயிற்சி ஏடு, ஆய்வுக்கூட மேற்சட்டை மற்றும் கண் பாதுகாப்பு கண்ணாடி அளிக்கப்பட்டு வருகிறது.

உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கும் ரூ.64,00,000/– செலவில் நகல் இயந்திரம் (Photo Copier), மின் ஆக்கிகள் (Generators) ரூ.1,20,00,000/–செலவிலும், வளவகுப்பறைகள் (Smart Class Rooms) ரூ.3,28,00,000/- செலவிலும் ஆகியவை வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று வரும் 2016–2017 கல்வி ஆண்டில் மேலும் கூடுதலான தேர்ச்சி விழுக்காட்டினை பெற நடப்பு கல்வியாண்டில் 35 பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் துவங்குதல், ஏற்கனவே 14 மேல்நிலைப்பள்ளிகளில் CCTV கோமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள அனைத்து தொடக்க/நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பான சூழலுக்காக CCTV கேமராக்கள் பொருத்துதல், மழையால் பாதிக்கப்பட்ட பள்ளிகளுக்கு புதிதாக கணினிகள் வழங்குதல், அனைத்து பள்ளிகளுக்கும் மாணவர்களுக்கு தேவையான இருக்கை வசதிகள் (Dual Desk) செய்து கொடுத்தல் போன்ற நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாநகராட்சி**